குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்.
முன்னிலை: திரு.R.கைலாஷ், B.A., B.L.,
நீதித்துறை நடுவர், சீர்காழி.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ஆம் நாள் திங்கள்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 134/2023
CNR.NO.TNMY08-003594-2023

<table>
<tr><td>குற்றமுறையீட்டாளர் :</td><td>அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>சீர்காழி காவல் நிலையம்,<br>மயிலாடுதுறை மாவட்டம்,<br>குற்ற எண்.23/2022</td></tr>
<tr><td colspan="2">/எதிராக/</td></tr>
<tr><td>குற்றம்சாட்டப்பட்டவர்:</td><td>1. பார்த்திபன், /2022, த/பெ. ராமகிருஷ்ணன், புதுத்தெரு, சீர்காழி.<br>2. தினேஷ்குமார் 29/2022, த/பெ. காசிநாதன், நடுத்தெரு, முட்டம், எலந்தங்குடி, மயிலாடுதுறை.<br>3.ஜான்சன், 28/2022 த/பெ. வில்சன், தென்பாதி தெரு, சேந்தங்குடி, மயிலாடுதுறை.</td></tr>
<tr><td>குற்றச்சாட்டு</td><td>இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 341, 294(b), 386, 506(ii) மற்றும் 25(1-B) (b) Arms Act</td></tr>
<tr><td>குற்றம் நிகழ்ந்த நாள்</td><td>11.01.2022</td></tr>
<tr><td>தகவல் தெரிவிக்கப்பட்ட நாள்</td><td>11.01.2022</td></tr>
<tr><td>எதிரி கைது செய்யப்பட்ட நாள்</td><td>2,3 எதிரிகள் 11.01.2022</td></tr>
<tr><td>எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>2,3 எதிரிகள் 18.02.2022<br>1 ம் எதிரி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் நாகப்பட்டினத்தின் Crlmp No.206/2022. 31.01.2022 தேதியிட்ட உத்தரவின்படி முன் பிணை பெற்று, 11.02.2022ல் இந்நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளார்.</td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு 240-ன் கீழ் குற்றச்சாட்டு குறித்து எதிரியிடம் கேட்கப்பட்ட நாள்</td><td>22.10.2025</td></tr>
<tr><td>விசாரணை தொடங்கிய நாள்</td><td>24.11.2025</td></tr>
<tr><td>விசாரணை முடிவடைந்த நாள்</td><td>09.03.2026</td></tr>
<tr><td>BNSS 359-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் விபரம்</td><td>--</td></tr>
<tr><td>முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதிகள்</td><td><table><tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr><tr><td>அரசு தரப்பு சாட்சி.1</td><td>24.11.2025</td><td>24.11.2025</td></tr></table></td></tr>
</table>



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.09 20:58:13 +0530

<table>
<tr><td></td><td><table><tr><td>அரசு தரப்பு சாட்சி.2</td><td>24.11.2025</td><td>24.11.2025</td></tr><tr><td>அரசு தரப்பு சாட்சி.3</td><td>27.11.2025</td><td>27.11.2025</td></tr><tr><td>அரசு தரப்பு சாட்சி.4</td><td>23.02.2026</td><td>23.02.2026</td></tr></table></td></tr>
<tr><td>கு.வி.மு.ச.பிரிவு 313(1)(பி)–ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>25.02.2026</td></tr>
<tr><td>தலைமறைவு எதிரி குறித்த விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விபரம்</td><td>இல்லை</td></tr>
<tr><td>வழக்கு விசாரணையில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம்</td><td>போலிசார் எதிரிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதில் தாமதம் ஏற்பட்டது.</td></tr>
<tr><td>தீர்மானம்</td><td>எதிரிகள் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 386, 506(ii) மற்றும் 25(1–B) (b) Arms Act ன் கீழ் குற்றவாளி இல்லை என தீர்மானம்</td></tr>
<tr><td>முடிவு</td><td>முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எதிரிகள் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 386, 506(ii) மற்றும் 25(1–B) (a) Act ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.</td></tr>
</table>

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தால் கடந்த 01.06.2023ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக இறுதியாக 09.03.20265 ஆம் தேதி விசாரணைக்கு வந்தபோது, குற்ற முறையீட்டாளர் தரப்பில் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை–II திருமதி. K. நிவேதா அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N.பிரபு அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இன்று நீதிமன்றம் வழங்கிடும்.

<u>**தீர்ப்புரை**</u>

1. இவ்வழக்கானது, புகார்தாரரும், சாட்சி–1ம் ஆன அய்யப்பன் என்பவர் தனது எலக்ட்ரீசியன் வேலையை முடித்து விட்டு, கடந்த 11.01.2022ந் தேதி பகல் 11.00 மணியளவில் தென்பாதி தோசதி கதிர்வேல் நகரிலிருந்து சீர்காழி நோக்கி இருச்சக்கர வாகனத்தில் வந்து



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.09 20:58:19 +0530

கொண்டிருந்தபோது, அத்திகுட்டை மதகு அருகே எதிரிகள் அனைவரும் சாட்சி-1யை வழிமறித்து 'குச்சிக்காரி, தேவடியா மவனே' என்று கூறி 1ம் எதிரி பார்த்திபன் அவர் முதுகில் மறைத்து வைத்திருந்த வீச்சு அருவாளை காட்டி 'பணம் எவ்வளவு வைச்சிருக்க?' என்று கேட்க, அதற்கு அவர் இப்போதுதான் வேலை பார்த்து விட்டு கூலியாக 200/- ரூபாய் வைத்திருக்கிறேன் என்று கூறியதும், 1ம் எதிரி 'மரியாதையாக அந்த பணத்தை எங்களிடம் கொடு' என்று கூறி, தான் புதுத்துறையை சேர்ந்த ராமகிருஷ்ணன் மகன் பார்த்திபன் என்றும் மற்றவர்களை காட்டி அவர்கள் தனது கூட்டாளிகள் என்றும் சொல்லி, 'நாங்கள்ளாம் பெரிய ரவுடிடா' என்று கூறி புகார்தாரர் மேல் சட்டை பையில் வைத்திருந்த ரூபாய் 200/-யை எடுத்து கொண்டு அவருக்கு கொலை மிரட்டல் விடுத்துச் சென்றது சம்பந்தமாக, மேற்படி எதிரிகளின் செயல் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 386, 506(ii)ன் கீழும் சட்டப்பிரிவு 25(1-B) (b) Arms Actன் கீழும் தண்டிக்கத்தக்கது என்று கருதி சீர்காழி காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 173(2)ன் கீழ் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கையின் அடிப்படையில் எழுந்த வழக்கு ஆகும்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகளுக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு எழுந்ததால் வழக்கானது இந்நீதிமன்றத்தால் கடந்த 01.06.2023ம் தேதி கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு எதிகள்ரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் 06.10.2025ம் தேதி குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 207ன் கீழ் வழக்கு ஆவணங்களின் நகல் கட்டணமின்றி வழங்கப்பட்டது. கடந்த 22.10.2025024ம் தேதி எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 386, 506(ii) & 25(1-B) (b) Arms Act ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்றச்சாட்டின் சாராம்சங்கள் குறித்து எதிரிகளிடம் விளக்கி கேட்டபோது, எதிரிகள் 'பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை வேண்டுமென்றும்' கூறினார்கள். எனவே, இவ்வழக்கு சாட்சிகளின் விசாரணைக்காக உத்தரவிடப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.1 முதல் 4 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டும், அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 6 குறியீடு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் எவ்வித சாட்சிகளும் விசாரிக்கப்படவில்லை. பட்டியல் சாட்சிகள் 3, 5, 6, 7 ஆகியோர் உதவி அரசு குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையில் விசாரிக்கப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.



KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.03.09 20:58:26 +0530

4. இவ்வழக்கில் கடந்த 25.02.2026ம் தேதி அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் சாட்சியம் குறித்து, அவற்றை கேள்விகளாக தொகுத்து குற்ற விசாரணை முறை சட்டம் 313(1)(b) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரிகள் அதனை மறுத்து 'பொய் சாட்சி, பொய் வழக்கு' என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க வாய்மொழி சாட்சி இல்லை' என்றும் கூறினார்கள். ஆகவே, எதிரிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது. இருதரப்பு சாட்சிய விசாரணைகள் முடிக்கப்பட்டதால் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5. அரசு தரப்பில் அரசு தரப்பு சாட்சி.4ன் சாட்சியத்தின் மூலமாகவும், குறியீடு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு சான்றாவணம்.1 முதல் 6 ஆவணங்கள் வாயிலாகவும், அரசு தரப்பு வழக்கை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, எதிரிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்றும், அரசு தரப்பில் வாதிடப்பட்டது.

6. இவ்வழக்கின் புகார்தாரர் அரசு தரப்பு சாட்சி.1, ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அரசு தரப்பு சாட்சி–2, பார்வை மகசர் சாட்சியான அரசு தரப்பு சாட்சி–3 ஆகியோர் பிறழ் சாட்சிகளாக மாறி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சி.4ன் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றவாளி என்று முடிவு செய்ய முடியாது என்றும், எனவே, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமாறு வாதிடப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கபட வேண்டிய பிரச்சனைகள்

i) இவ்வழக்கில் எதிரிகள் மீதான இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 386, 506(ii) R/w 25(1–B) (b) Arms Actன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

8. **தீர்வு:–**

8.1) அரசு தரப்பு வழக்கு எவ்வாறு அமைந்துள்ளது என்பது பற்றி மேலெழுந்த வாரியாக பார்க்கும்போது, இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா என பார்க்கும்போது, இவ்வழக்கின் புகார்தாரர் அரசு தரப்பு சாட்சி.1 தனது புகார் மனுவில், 11.01.2022ந் தேதி பகல் 11.00 மணியளவில் அத்திகுட்டை மதகு அருகே தனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது இவ்வழக்கின்



KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.09 20:58:32 +0530

எதிரிகளான மூன்று பேர் தன்னை வழிமறித்து தகாத வார்த்தைகளால் திட்டி, அதில் ஒருவர் அவர் முதுகில் மறைத்து வைத்திருந்த வீச்சு அரிவாளை காட்டி மிரட்டி தனது சட்டை பையில் வைத்திருந்த ரூ.200/-ஐ எடுத்து கொண்டு சென்று விட்டதாக குறிப்பிட்டு புகார் மனு கொடுத்துள்ளபோதிலும், தனது முதல் விசாரணையில், அ.சா.1 இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், புகார் மனுவில் உள்ள கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும், தான் யார் மீதும் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

8.3) அதேபோல இவ்வழக்கு ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சியான அரசு தரப்பு சாட்சி 2 தனது முதல் விசாரணையில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ளது தன்னுடைய கையொப்பம் அல்ல என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

8.4) அதேபோல இவ்வழக்கு பார்வை மகசர் சாட்சியான அரசு தரப்பு சாட்சி 3 தனது முதல் விசாரணையில், பார்வை மகசரில் உள்ள கையெழுத்துக்கள் எதுவும் தன்னுடையது அல்ல என்றும், போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

8.6) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அரசு தரப்பு சாட்சி.4 தனது சாட்சியத்தில், கடந்த 2021ம் ஆண்டு சீர்காழி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அசோக்குமார் அவர்களால் பதிவு செய்யப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தது பற்றியும், எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 341, 294(b), 386, 506(ii) மற்றும் 25(1-B) (b) Arms Actன் கீழ் குற்ற எண் 23/2022ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், சம்பவ இடத்திற்கு 13.30 மணிக்கு சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது பற்றியும், பட்டியல் சாட்சிகள் 3 முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தது பற்றியும், எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் 2,3யை 11.02.2022ம் தேதி கைது செய்து சாட்சிகள் முன்னிலையில் எதிரிகள் தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தது பற்றியும், அதன் அடிப்படையில் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் மூலமாக வழக்கு சொத்தை கைப்பற்றியது பற்றியும், வழக்கு தடயத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து படிவம்'95 தயார் செய்தது பற்றியும், இறுதியாக இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற



KAILAASH R Digitally signed by KAILAASH R Date: 2026.03.09 20:58:37 +0530

இறுதியறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியமளித்திருப்பினும், இவ்வழக்கின் புகார்தாரர் மற்றும் முக்கிய சாட்சிகளான அரசு தரப்பு சாட்சி.1 முதல் 3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் பிறழ் சாட்சிகளாக மாறி சாட்சியம் அளித்துள்ளதை கருத்திற்கொண்டு, அரசு தரப்பு சாட்சி.4 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகளின் குற்ற செயல் அரசு தரப்பில் நிரூபித்துள்ளதாக தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவில் அரசு தரப்பில், முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளின் வாயிலாக எதிரி மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 341, 294(b), 386, 506(ii) மற்றும் 25(1–B) (b) Arms Actன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து எதிரிகளை மேற்கண்ட பிரிவுகளின் கீழ் குற்றவாளி இல்லை என குற்ற விசாரணை முறை சட்டம் 248(1) பிரிவின் படி எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

10. எதிரிகள் இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரங்கள் வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக இரத்தாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

11. இவ்வழக்கின் வழக்கு சொத்தாக C.P.No74/2023ல் பதியப்பட்டுள்ள 54 cm நீளமுள்ள அருவாள் ஒன்றை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ஆம் நாள் ஆகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.09 20:58:43 +0530

நீதித்துறை நடுவர்
சீர்காழி.

1. அரசுத் தரப்பு சாட்சிகள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி.1 | திரு. அய்யப்பன் | புகார்தாரர் |
| அரசு தரப்பு சாட்சி.2 | திரு. மூர்த்தி | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.3 | திரு.ஜாபர்சாதிக் | பார்வை மகசர் சாட்சி |
| அரசு தரப்பு சாட்சி.4 | திரு. மணிமாறன் | காவல் ஆய்வாளர் |

2. அரசு தரப்பு சான்றாவணங்கள்:

| | | |
|---|---|---|
| அரசு தரப்பு சான்றாவணம்–1/ அரசு தரப்பு சாட்சி.5 | 11.01.2022 | புகார் மனு |
| அரசு தரப்பு சான்றாவணம்–2/ அரசு தரப்பு சாட்சி.5 | 11.01.2022 | முதல் தகவல் அறிக்கை |
| அரசு தரப்பு சான்றாவணம்–3/ அரசு தரப்பு சாட்சி.5 | 11.01.2022 | பார்வை மகஜர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–4/ அரசு தரப்பு சாட்சி.5 | 11.01.2022 | மாதிரி வரைபடம் |
| அரசு தரப்பு சான்றாவணம்–5/ அரசு தரப்பு சாட்சி.5 | 11.01.2022 | கைப்பற்றுதல் மகசர் |
| அரசு தரப்பு சான்றாவணம்–6/ அரசு தரப்பு சாட்சி.5 | 11.01.2022 | படிவம்'95 |

3. அரசு தரப்பு சான்று பொருட்கள்: C.P.No.74/2023 54 செ.மீ நீளமுள்ள அருவாள் –1

4. எதிரிகள் தரப்பு சாட்சிகள்: இல்லை.

5. எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருள்: இல்லை

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.09 20:58:51 +0530

நீதித்துறை நடுவர்,
சீர்காழி.

குறிப்பு

1.தீர்ப்பு பற்றிய தகவல் காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

2.இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி நீதிமன்ற பிணையில் இருந்து வருகின்றார்.

3.இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

நகல்

1)மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், மயிலாடுதுறை அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.